Fullerton India

# தனிநபர்/தொழில் கடன்

## கடன் சுருக்கப் பட்டியல்

இந்தக் கடன் ஒப்பந்தத்தை (''ஒப்பந்தம்'') ____________________ என்ற இடத்தில் _____ இன்று ________________ஆம் மாதம் 20____________ ஆம் வருடம் செய்து கொண்டோம் ☒

இதைப் பின்வருவர்களாலும், பின்வருபவர்களுக்கு இடையிலும் செய்து கொண்டோம்

கடன் வாங்கியவர்(களாகிய), இவர்களது விவரங்களை இந்த ஒப்பத்தத்திற்குப் பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளக் கடன் சுருக்கப் பட்டியலில் இன்னும் குறிப்பாக விவரித்துச் சொல்லியுள்ளோம் அதோடு, இடப்பொருளுக்கு அவ்விதமாக அவசியமாகிற இடங்களில், இதில், அதில் பெயர் குறிப்பிட்டுள்ள கூட்டாகச் சேர்ந்து-கடன் வாங்கியவர்(கள்) அடங்குவர் அதோடு இனிமேல் கூட்டாகச் சேர்ந்து கடன் வாங்கியவர்(க)ள் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களாக இருந்தால், அவர்களைக் கடன் வாங்கியவர்(கள்) என்று குறிப்பிடுவோம் (இந்தச் சொல்லில், அதிலுள்ள இடப்பொருள் அல்லது அர்த்தத்திற்கு எதிர்ப்பானதாக இருந்தால் ஒழிய, கடன் வாங்குபவர்கள் தனிநபராக இருக்கிற இடத்தில், அவரது வாரிசுகள், அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள் அடங்குவர்; கடன் வாங்குபவர்(கள்) உரிமைத்துவ நிறுவனமாக இருக்கிற இடத்தில், தனிப்பட்ட உரிமையாளராக யாருடைய பெயர் இருக்கிறதோ அவரும், அவரது வாரிசுகள், அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகளும், சட்டப்பூர்வப் பிரதிநிதிகளும், சட்டப்பூர்வ நியமனதாரர்களும் அடங்குவர்; கடன் வாங்குபவர்கள் கூட்டு-நிறுவனமாக இருக்கிற பட்சத்தில், அந்தக் கூட்டு-நிறுவனத்தின் கூட்டாளிகள் அல்லது அந்த நேரத்தில் கூட்டாளிகளாக இருப்பவர்கள், அவர்களில் உயிர் பிழைத்திருப்பவர்கள், அவர்களது வாரிசுதாரர்கள், அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள்; கடன் வாங்குபவர்கள் இந்து பிரிவுபடாத குடும்பத்தின் தலைவராக இருக்கிற இடத்தில், அந்த நேரத்தில் அந்த இந்து பிரிவுபடாத குடும்பத்தின் உறுப்பினர்களாக இருப்பவர்கள், அவர்களது உரிய வாரிசுதாரர்கள், அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் வாரிசு நியமனம் பெற்றவர்கள்; கடன் வாங்குபவர்கள் ஓர் நிறுவனமாக இருக்கிற இடத்தில், அடுத்து பதவிக்கு வருபவர்கள் மற்றும் நியமனம் பெற்றவர்கள்; கடன் வாங்குபவர்கள் ஸ்தாபிதம் பெற்ற அமைப்பாக இருக்கிற இடத்தில், அந்த அமைப்பின் அனைத்து உறுப்பினர்களும், அவர்களை அடுத்து உரியபடி பதவிக்கு வருபவர்களும்; கடன் வாங்குபவர்கள் ஒரு சங்கமாக இருக்கிற இடத்தில், நிர்வாகக் குழுவும், அந்த நிர்வாகக் குழுவில் அடுத்தடுத்து பதவிக்கு வருபவர்களும், தேர்ந்தெடுக்கிற, நியமிக்கிற அல்லது சேர்த்துத் தெரிவு செய்கிற புதிய உறுப்பினர்கள் எவரும், கடன் வாங்குபவர்கள் ஒரு அறக்கட்டளையாக இருக்கிற பட்சத்தில், அறங்காவலர்களும், அறக்கட்டளையில் அடுத்தடுத்து பதவிக்கு வருபவர்களும், கடன் வாங்குபவர்கள் லிமிட்டட் லையபிலிட்டி கூட்டு நிறுவனமாக இருக்கிற இடத்தில், அந்த லிமிட்டட் லையபிலிட்டி கூட்டு நிறுவனத்தின் கூட்டாளிகளும், அந்த நேரத்தில் கூட்டாளிகளாக இருப்பவர்களும், அவர்களது வாரிசுதாரர்கள், அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகளும், அடுத்தடுத்துப் பதவிக்கு வருபவர்களும், அந்நிறுவனத்தின் நியமனம் பெறுபவர்களும்) ஒரு தரப்பிலும்

மற்றும்

கம்பெனிகள் சட்டம் 1956-ன் கீழ் பதிவு பெற்றுள்ளதும், தனது பதிவு அலுவலகத்தை, மெக் டவர்ஸ், 3 ஆம் தளம், பழைய எண். 307, புதிய எண். 165, பூந்தமல்லி ஹை ரோடு, மதுரவாயல், சென்னை-600095, தமிழ்நாடு என்ற முகவரியில் கொண்டதும், அதோடு மற்றவற்றின் மத்தியில், இத்துடன் இணைத்துள்ளக் கடன் சுருக்கப் பட்டியலில் சொல்லியுள்ள முகவரியில் கிளை அலுவலகம் ஒன்றைக் கொண்டதுமான (அதோடு இனிமேல் "FICCL" என்று குறிப்பிடுவோம், இந்தச் சொல்லில், இடப்பொருளுக்கு எதிர்ப்பானதாக இருந்தால் ஒழிய, அதன் அடுத்தடுத்து பதவிக்கு வருபவர்கள் மற்றும் நியமனம் பெறுபவர்கள் அடங்குவர்) நிறுவனமான, ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிட்டட், மறுதரப்பிலும்.

பாலினம் எதையும் குறிப்பிடுவதில் அனைத்துப் பாலினங்களும் அடங்கும் அதோடு ஒற்றை எண்ணைக் குறிப்பிடுவதில், பன்மை எண்களைக் குறிப்பிடுவதும் அடங்கும் அதோடு அதன் பொருளில் தலைகீழானதும் அடங்கும். ஒப்பந்தம் என்பது, இந்தக் கடன் ஒப்பந்தம், கடன் சுருக்கப் பட்டியல், இத்தோடு இணைத்துள்ள கட்டணங்கள் விவரத் தாள் மற்றும் இணைப்புப் பட்டியல்கள் எதுவும், பணம் திருப்பிச் செலுத்தும் பட்டியல்கள், இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அமைகிறபடி இப்போது அல்லது இனிமேல் இணைக்கிற பின்னிணைப்பு மற்றும் பின்னிணைப்பு எதுவும், சாட்சி ஆவணங்கள் அல்லது இந்த ஒப்பந்தத்தோடு, இப்போதோ அல்லது இதற்குப் பிறகோ, அவ்வப்போது இணைக்கிற மற்ற சேர்க்கை ஆகியவற்றைப் பொருள் கொண்டு, உள்ளடக்கியிருக்கும்.

இதில் கடன் வாங்கியவர்(கள்) தொழில்/தனிப்பட்ட/வியாபாரத்தேவைகளுக்கு ஒரு கடன் வேண்டுமென FICCL நிறுவனத்திடம் வேண்டிக் கொண்டிருக்கிறார்கள் அதோடு கடன் வாங்குபவர்(களின்) வேண்டுகோளின் பேரில், FICCL நிறுவனம் இங்கே தோன்றுகிற பரஸ்பரம் ஒப்புக் கொண்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் கடன் (இதற்குப் பிறகு வரையறுக்கிறபடி) கொடுக்க முன்வர ஒப்புக் கொண்டிருக்கிறது.

இப்போது, கீழுள்ளபடி, இங்குள்ள விஷயங்களுக்கு இத்தரப்பினரிடையே இப்படியாக ஒப்புதலாகிறது:-

1. கடன், கடன் கொடுத்தல், வட்டி மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்துதல்

1.1 இங்குள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, கடன் வாங்குபவர்(கள்), FICCL நிறுவனத்திடமிருந்து கடன் வாங்கிக் கொள்ள ஒப்புக் கொள்கிறார்கள் அதோடு இதற்கான கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொகையை FICCL நிறுவனம் கடன் வாங்குபர்களுக்கு கடன் (இத்தொகையை இதற்குப் பிறகு கடன் என்று குறிப்பிடுவோம்) கொடுக்க ஒப்புக் கொள்கிறது. கடனை முழுவதுமாகவோ அல்லது தவணைகளிலோ அல்லது FICCL நிறுவனம் முடிவு செய்கிற அதுபோன்ற இன்னொரு முறையில் வினியோகம் செய்யலாம். கடனை கடன் வாங்குபவர்(கள்) நியமிக்கக்கூடிய அதுபோன்ற மற்ற நபர்(களுக்கு) வினியோகம் செய்யலாம்; ஆயினும், மேற்சொன்ன அந்நியமித்த நபர்(களுக்கு) FICCL நிறுவனம் கடனை வியோகிப்பது, கடன் தொடர்பாக கடன் வாங்குபவர்(களுக்கு) இருக்கிற கடப்பாடுகளைப் பாதிக்காது அதோடு அந்நியமித்த நபர்(களுக்கு) அதுபோன்று கடனை வினியோகிப்பதை, கடன் வாங்குபவர்(களுக்கு) வழங்கி, அவர்கள் பெற்ற கடனாகவே நிதானிப்போம்.

1.2 கடன் வாங்குபவர்(கள்) கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள விகிதத்திலேயே கடன் தொகையில் வட்டி செலுத்துவார்கள். கடனுக்கான வட்டியை, நிலுவையிலுள்ள அசல் தொகையில் மாதாந்திர எச்சத் தொகைகளுக்கு அன்றாட அடிப்படையில் கணக்கிடுவோம். கடனில் வட்டி, கடனைக் கொடுக்க, இடைவழியில், வசூலிப்பதில், காசோலைகளைக் காசாக்குவதில் மற்றும் அல்லது கடன் வாங்கியவர்(கள்) அல்லது அவரது வங்கியினால் ஏற்படுகிற வேறு ஏதேனும் காரணத்தினால் ஆகும் நேரத்தைப் பொருட்படுத்தாமல், ஒப்பந்தத் தேதியிலிருந்து சேர ஆரம்பிக்கும்.

---

கடன் வாங்கியவர்(கள்) ☒ கூட்டாகச் சேர்ந்து கடன் வாங்கியவர் ☒ FICCL-காக அங்கீகாரம் பெற்ற கையொப்பதாரர்

1.3 கடன் வாங்குபவர்(கள்) கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள தவணைத் தேதிகளிலும், முறையிலும் மாதாந்திரத் தவணைகளில் வட்டியோடு சேர்த்துக் கடனைத் திருப்பிச் செலுத்துவார்கள்/செலுத்துவார்கள்.

1.4 கடன் வாங்குபவர்கள், கடன் சுருக்கப் பட்டியலிலும், கட்டணங்கள் விவரத்தாளிலும், FICCL நிறுவனத்தின் (http://www.fullertonindia.com/about-us/loan-charges.aspx) என்ற இணையதளத்திலும் குறிப்பிட்டுள்ளபடியான, FICCL நிறுவனச் செலவுகள் மற்றும் கட்டணங்களைத் தாங்களே பார்த்துக் கொண்டு அதனைச் செலுத்தி விடுவார்கள் அதோடு அவற்றில் ஆவணக் கட்டணம் மற்றும் நடவடிக்கைக் கட்டணங்கள் (திருப்பித் தராதது), முன்-EMI வட்டி (பொருந்துமானால்), மற்றும் காசோலை பணம் இல்லாமல் திரும்புவதற்கான கட்டணங்கள், காசோலை/ICS வசதிக் கட்டணங்கள், கூடுதல் வட்டி, முன்னரே பணம் செலுத்துவதற்கான கட்டணங்கள் மற்றும் அவ்வப்போது FICCL நிறுவனத்தின் உள்ளான கொள்கைகளுக்கு ஏற்ப் பொருந்துகிறபடியான கட்டணம் அல்லது செலவுகள் எதுவும், இவை மட்டும் தான் என்றில்லாமல், அடங்கும். FICCL நிறுவனத்திற்கு, கடன் வாங்குபவர்களுக்கு அறிவிப்பு எதையும் கொடுக்காமலேயே மேற்படிக் கட்டணங்களைத் திருத்தியமைப்பதற்கான உரிமை இருக்கும். மேற்படிக் கட்டணங்களுக்குக் கூடுதலாக, கடன் வாங்குபவர்கள் FICCL நிறுவனத்திற்கு, வட்டி வரி, சேவை வரி, சுங்கம் (முத்திரை சுங்கம் உட்பட), மற்றும் வரிகளையும் (அரசாங்கம் அல்லது மற்ற ஆணையிஅம் அவ்வப்போது விதிக்கக்கூடிய எந்த விவரமும்), (a) கடனுக்கான, கடனைக் கொடுப்பதற்கான, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான விண்ணப்பம் (b) வட்டியோடு சேர்த்துக் கடனை மீட்பது மற்றும் பணமாக்குவது; (c) அமலாக்க நடவடிக்கைகள் தொடர்பாக இருக்கிற மற்ற அனைத்டுச்செலவுகளையும், அது எதுவாக இருந்தாலும், அவற்றைத் தாங்களே பார்த்துக் கொண்டு, அதனைச் செலுத்தி, நிறுவனம் செலுத்தியிருந்தால் அதனைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும்.

1.5 கடனின் கீழ் FICCL நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியுள்ள தொகையை விட அதிகமான தொகைகள் எதையும் கடன் வாங்கியர் திருப்பிச் செலுத்துகிற/செலுத்து விடுகிற நிகழ்வில், அது போன்ற உபரித் தொகைகளைத் திருப்பிக் கொடுப்பதற்கு, FICCL நிறுவனம் அவ்வப்போது முடிவு செய்கிறபடியான நடவடிக்கைக் கட்டணத்தை விதிப்பதற்கான உரிமை FICCL நிறுவனத்திற்கே இருக்கிறது.

1.6 முன்-EMI வட்டி, முன்கூட்டியே செலுத்துகிற தவணை, காப்பீட்டுப் பிரீமியம், ஆவணமாக்கல் மற்றும் நடவடிக்கைக் கட்டணங்கள் மற்றும்/அல்லது கடனின் கீழ் அல்லது கடன் தொடர்பாக இருக்கிற எந்தக் கட்டணங்களையும் கடன் தொகையிலிருந்தே பிடித்துக் கொள்வோம் அதோடு, அதுபோன்ற கட்டணங்கள்/செலவினங்களைப் பிடித்தம் செய்த பிறகு இருக்கிற நிகரக் கடன் தொகையை மட்டுமே கடன் வாங்குபவர்களுக்குக் கொடுப்போம்.

1.7 கடனுக்கான திருப்பிச் செலுத்தும் திட்டம் ஒன்று இருக்கிற போதிலும், கடன் தொகையானது கோரிக்கையின் பேரில் முன்னதாகவும், அதற்கேற்பவும் செலுத்தக்கூடியதாகவே இருக்கும், கேட்கையில் முன்னதாகவே கடனின் கீழ் இருக்கிற நிலுவைத் தொகையையும், கடன் சம்பந்தமாக, வட்டி உள்ளிட்ட மற்ற அனைத்து உரிய செலுத்த வேண்டிய தொகைகளையும் FICCL நிறுவனத்திற்கு செலுத்துவிடுவதற்கான உரிமை அதற்கு இருக்கும்.

1.8 கடன் வாங்கியவர்கள், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குப் பின் தேதியிட்ட காசோலைகளை (PDC)/ECS கொடுக்க ஒப்புக் கொள்கிறார்கள். கடன் வாங்கியவர்(கள்), ECS முறையில் பணம் செலுத்துவது, FICCL நிறுவனப் பெயரில் கொடுத்துள்ள பின் தேதியிட்ட காசோலைகளுக்கு மேலானதாகவும், அதற்கு அதிகமானதாகவும் இருக்கும் என்பதாக ஒப்புகை செய்கிறார்கள்.

1.9 கடன் வாங்கியவர்(கள்), கடன் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள நோக்கத்தைத் தவிர வேறு எந்த நோக்கத்திற்கும், அல்லது எந்த யூக, முறையற்ற அல்லது சட்டவிரோத அல்லது சட்டத்திற்குட்படாத நோக்கங்கள்/செயல்பாடுகளுக்கும், கடனை (அல்லது அதில் ஒரு பகுதியை) உபயோகிக்க மாட்டோம் என்று உறுதி செய்கிறார்கள் ஒப்புகை செய்கிறார்கள்.

1.10 கடன் வாங்குபவர்(கள்) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களாக இருக்கும் நிகழ்வில், கடனை வட்டியோடு திருப்பிச் செலுத்தி, இந்த ஒப்பந்ததின் கீழுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கான கடன் வாங்குபவர்(கள்) மற்றும் கூட்டாகக் கடன் வாங்குபவர்(களின்) பொறுப்பு, கூட்டாகவும், பலராகவும் இருந்து, அனைவருக்கும் சேர்ந்து இருப்பதாக இருக்கும்.

1.11 கடன் வாங்கியவர்(கள்) இந்த ஒப்பந்தத்தின் கீழும், இதைத் தொடர்ந்தும் FICCL நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியுள்ள பணம் அனைத்தும், சிக்கலில்லாததாகவும், சுத்தமானதாகவும், எவ்வித வரிக் கழிவு காரணமான எவ்விதப் பிடித்தங்கள் இல்லாததாகவும், அதுபோன்ற பிடித்தங்களைச் செய்திருக்கவில்லை அல்லது அவசியமாகியிருக்கவில்லை என்றால் FICCL நிறுவனம் பெற்றிருக்கும் தொகைக்குச் சமமானதோர் தொகையை அது பெற்றுத் தக்க வைத்திருக்கும் வகையில் இருக்க வேண்டும். சேவை வரி மற்றும் மற்ற பொருந்துகிற வரிகள் அல்லது மற்ற சட்டப்பூர்வ வரி விதிப்புகள் எதுவுமிருந்தால், அவை, கடன் வாங்கியவர்களுக்கு விதித்து, அவர்கள் செலுத்தக்கூடியதாக இருக்கும்.

1.12 இதன் கீழ் செலுத்த வேண்டியதாக இருக்கிற EMI தொகைகளைச் செலுத்துவதில் கடமை தவறிய செயல் ஒன்றை கடன் வாங்கியவர்(கள்) செய்கிற நிகழ்வில், கடனின் கீழ் நிலுவையாக இருக்கிற அசல் தொகைகளில் கூடுதல் வட்டியை, இத்துடனுள்ள கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள விகிதத்தில், மாதாந்திர மீதத்தொகைகளோடு சேர்த்து, அல்லது அவ்வப்போது நிறுவனம் அறிவிக்கக்கூடிய அதுபோன்ற கால மீதத்தொகைகளோடு சேர்த்து, கடமை தவறிய தேதியிலிருந்து, அதிகப்பற்றாக இருக்கிற தொகைகள் அனைத்தையும் செலுத்தித் தீர்க்கும் தேதி வரை, கடன் வாங்கியவர்(கள்) செலுத்த வேண்டும். கூடுதல் வட்டியைச் செலுத்துவது, இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் வாங்கியவர்(களுக்கு) இருக்கிற கடமைகளை ஒன்றுமில்லாமல் போகச் செய்யாது. இங்கே மேற்படியானதில் இருக்கிற எதுவும் இருந்த போதிலும், கடன் வாங்கியவர்(கள்) கடமை தவறிய எதனாலும் FICCL நிறுவனத்திற்குச் சேரக்கூடிய அனைத்து உரிமைகளையும் வெளிப்படையாகத் தக்க வைத்துக் கொள்கிறது. கூடுதல் வட்டியானது, கடன் என்ற வகையில் கடன் வாங்கியவர்(கள்) FICCL நிறுவனத்திற்குச் செலுத்தக் கடமைப்பட்டுள்ள வேறு எந்தக் கட்டணங்களுக்கும் கூடுதலானதாக இருக்கும்.

1.13 கடன் வாங்குபவர்கள், எந்த நேரத்திலும், FICCL நிறுவனத்திற்கு 21 நாட்கள் முன் அறிவிப்பை எழுத்துப் பூர்வமாக FICCL நிறுவனத்திற்குக் கொடுப்பதன் ஒட்டுமொத்தக் கடன் தொகையையும், வட்டியோடு சேர்த்து முன்னரே கொடுத்துத் தீர்த்து விடலாம். கடன் வாங்குபவர்கள், கடனை முன்னரே செலுத்திக் கொள்வதற்குத் தங்களுக்குள்ள உரிமையைப் பயன்படுத்திக் கொள்கிற நிகழ்வில், FICCL நிறுவனத்திற்கு, கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள விகிதத்தில் முன்னரே பணம் செலுத்துவதற்கான கட்டணத்தை விதிப்பதற்கு உரிமை இருக்கும். கடனைப் பாதியளவு முன்னரே செலுத்திக் கொள்வதற்கு அனுமதிப்பதில்லை.

1.14 கடன் வான்குபவர்கள் தவணைகளை முன்னதாகவே செலுத்திக் கொள்வதற்கு உரிமையுள்ளவர்களாகவும் இருப்பார்கள்; ஆயினும் FICCL நிறுவனம், முன்னதாகச் செலுத்திய தவணைகள் எதற்கும் வட்டி கொடுக்கப் பொறுப்புள்ளதாக இருக்காது.

1.15 கடன் வாங்குபவர்(கள்), கடன் தொடர்பாக விண்ணப்பமளிக்கும் மற்றும்/அல்லது ஆவணமாக்கும் நேரத்தில் கடன் கொடுப்பவர்(களுக்குக்) கடன் வாங்குபவர் செலுத்துகிற அனைத்துக் கட்டணங்கள், கடன் தொடர்பாக ஆதாரம் ஏற்படுத்துதல், சரிபார்த்தல் மற்றும் சட்டப்பூர்வச் செலவுகள் உட்பட இவை மட்டும் தான் என்றில்லாமல், ஏற்படுகிற அல்லது கடன் கொடுப்பவர்(கள்) ஏற்படச் செய்கிற ஒருமுறை செலுத்தும் கட்டணங்கள் மற்றும்/அல்லது செலவுகள் என்பதை தாங்கள் தெரிந்து கொண்டு, ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதை இதன் மூலம் ஒப்புகை அளித்து உறுதி செய்கிறார்கள்.

1.16 இந்தப் பிரிவு எண் 1-ன் கீழ் அல்லது இந்த ஒப்பந்தத்தில் உள்ள வேறு எந்தப் பிரிவின் கீழ் செலுத்தக்கூடிய கட்டணங்கள் எதையும், FICCL நிறுவனம் தனது சொந்த விருப்புரிமையின் பேரில் தள்ளுபடி செய்யலாம் அதோடு FICCL நிறுவனத்தின் முடிவே இறுதியானதாகவும், கடன் வாங்கியவர்களுக்கு சட்டப்பூர்வக் கோரிக்கை எதுவும் இல்லாமலும் இருக்கும்.

2. கடமை தவறிய நிகழ்வு மற்றும் கடமை தவறியதன் பின்விளைவுகள்

2.1 பின்வரும் நிலையில், கடமை தவறியதோர் நிகழ்வு ஏற்பட்டிருப்பதாக நிதானிக்கிறோம்: (a) இந்த ஒப்பந்தத்தில் இருக்கிற விதிகள் மற்றும் நிபந்தனைகள் எதையும் கடன் வாங்கியவர்(கள்) விதிமீறிச் செயல்படுகிறார்(கள்); அல்லது (b) கடன் வாங்கியவர்(கள்) தவணைத் தொகைகள் அல்லது வேறு எந்தப் பணப்பட்டுவாடாவையும், தவணைத் தேதிகளில் அல்லது அதற்கு முன்பாகச் செலுத்த/திருப்பிச் செலுத்தத் தவறுகிறார்(கள்); அல்லது (c) கடன் வாங்கியவர்(கள்) FICCL நிறுவனத்தோடு அல்லது வேறொரு வங்கியோடு மற்றும் நிதி நிறுவனத்தோடும் செய்து கொண்ட எந்த ஒப்பந்தத்தின் கீழும் கடமை தவறிய செயல் ஒன்றைச் செய்கிறார்; அல்லது (d) கடன் வாங்கியவர்(கள்) FICCL நிறுவனத்திற்குத் தவறான பிரதிநிதித்துவம் எதையும் செய்திருக்கிறார் எனத் தெரிய வருகிறது; அல்லது (e) கடன் வாங்கியவர்(கள்) தொழில் நொடித்துப் போகிறதோர் செயலைச் செய்கிறார் அல்லது கடன் வாங்கியவர்(களை) தொழிலில் நொடித்துப் போனவர் என்றோ அல்லது திவால் ஆனவர் என்றோ பிரகடனம் செய்கிறார்கள் அல்லது கடன் வாங்கியவர்(களின் சொத்து அல்லது நில புலங்கள் சம்பந்தமாக ஒரு விற்றுப் பணமாக்குபவரை, பெற்றுக் கொள்பவரை அல்லது ஒரு அலுவலரை நியமிக்கிறார்கள் அல்லது கடன் வாங்கியவர்(கள்) தங்களையே தொழிலில் நொடித்துப் போனவர்களாக அறிவிக்கும்படி கேட்டு ஒரு விண்ணப்பத்தைச் செய்திருக்கிற பட்சத்தில் அல்லது அல்லது கடன் வாங்கியவர்(களை)த் தொழிலில் நொடுத்துப் போனவர்கள் என்று அறிவிக்கக் கோருகிற விண்ணப்பம் ஒன்றைச் செய்திருக்கிறார்க்ள் அல்லது கடன் வாங்கியவர்களைத் தொழிலில் நொடித்துப் போனவர்களாக எடுத்துக் கொள்வதற்கு நீதிமன்றம் அல்லது அதிகாரத்தினர் உத்தரவு எதையும் பிறப்பித்திருக்கிறார்கள்; அல்லது (f) கடன் வாங்கியவர்(கள்) அல்லது கடன் வாங்கியவர்(களின்) கூட்டாளி அல்லது இயக்குநர் எவரும், பிரகடனம் செய்திருந்த தொழில்/வியாபாரத்தை நட்த்துவதை நிறுத்தி விடுகிறார்கள்; அல்லது (g) கடன் வாங்கியவர்களின் அந்தஸ்து அல்லது நிறுவன அமைப்பில் மாற்றம் எதுவும் இருக்கின்றது; அல்லது (h) FICCL நிறுவனத்தின் அபிப்பிராயத்தில், FICCL நிறுவனத்தின் நலனை அல்லது கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கடன் வாங்கியவர்(களின்) திறனைத் தப்பபிப்பிராயமாகப் பாதிக்கிற அல்லது பாதிக்கக்கூடிய சூழ்நிலைகள் எதுவும் நிலவுகின்றன.

2.2 கடமை தவறிய நிகழ்வுகள் எதுவும் நிகழ்வதன் பேரிலும், அதற்குப் பிறகு எந்த நேரத்திலும், நிலுவையிலுள்ள கடன் தொகையை, செலுத்தாமல் இருக்கிற தொகையாகவும், செலுத்தக்கூடிய தொகையாகவும் பிரகடனம் செய்வதற்கு நிறுவனத்திற்கு உரிமை இருக்கும் அதோடு அதன் பேரில், கடனின் கீழ் மற்றும்/அல்லது ஒப்பந்தத்தின் கீழும், அறிவிப்பின் விதிகளுக்கு இணங்க, மேற்கொண்டு எவ்வித அறிவிப்போ அல்லது எவ்விதமான சட்டப்பூர்வ சடங்குகளோ எதுவும் இல்லாமல், கடன் வாங்கியவர்(கள்) நிலுவையிலுள்ள மற்றும் செலுத்தக்கூடியதாகவுள்ள அனைத்துத் தொகையையும் செலுத்தி விடுவார்கள். கடன் வாங்கியவர்(கள்) குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்சொன்ன தொகைகளைச் செலுத்தத் தவறுவதன் பேரில், FICCL நிறுவனம், தனது சொந்த விருப்புரிமையில், பொருந்துகிற சட்டங்களின் கீழ் அதற்குக் கிடைக்கக்கூடிய எந்த உரிமை அல்லது நிவாரணத்தையும் பயன்படுத்தலாம்.

கடன் வாங்கியவர்(கள்) ☒ கூட்டாகச் சேர்ந்து கடன் வாங்கியவர் ☒ FICCL-காக அங்கீகாரம் பெற்ற கையொப்பதாரர்

3. மற்ற விதிகள் மற்றும் நிபந்தனைகள்

3.1 FICCL நிறுவனம், கடன் வாங்கியவர்களின் அனைத்துச் சொத்துக்களின் மீதும் FICCL நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் ஒரு பாத்தியதையை வைத்திருக்கும் அதோடு FICCL நிறுவனத்திலிருந்து கடன் வாங்கியவர்களுக்கு நிலுவையாக இருக்கக்கூடிய எந்தப் பணங்களுக்கும் எதிராக சரியீடு செய்வதற்கானதோர் உரிமையும், FICCL நிறுவனத்தின் நிலுவைத் தொகைகள் அனைத்தையும் வசூலிப்பதற்காக, கடன் வாங்கியவர்(களின்) அனைத்துக் கணக்குகளையும் ஒன்றிணைப்பதற்கான உரிமையும் இருக்கும்.

3.2 FICCL நிறுவனத்திற்கு எல்லா நேரங்களிலும் அதோடு கடன் வாங்கியவர்களுக்கு எவ்வித அறிவிப்பையும் கொடுக்காமல் சரியீடு செய்து, கடன் வாங்கியவர்களின் வரவில் அல்லது அவர்களது உடமையில் இருக்கிற, FICCL நிறுவனத்திற்கு அல்லது மேற்சொன்ன கடனில் அல்லது மற்றபடி முன்சொன்ன நிலுவையாக இருப்பதைச் செலுத்துவதன் பால், எந்த நேரத்திலும் செலுத்தக்கூடியதாக இருக்கிற எந்தத் தொகையையும் செலுத்துவதில் அல்லது செலுத்துவதின் பால் இருக்கிற, மற்ற பணம் அல்லது பணங்களை FICCL நிறுவனத்தின் கையில் சேர்ப்பதற்கும், வழக்குத் தொடுப்பதன் மூலம் அல்லது, பிணையச் சொத்துக்கள் அனைத்தும் அல்லது எதுவும் நிலுவையில் இருந்த போதிலும் அல்லது அவற்றைக் காசாக்காமல் இருக்கலாம் என்கிற போதிலும், மேற்சொன்னக் கடன் கணக்கு(களின்) கீழ் மற்றபடி கடன் வாங்கியவர்(களிடம்) இருந்து எந்த நேரத்திலும் FICCL நிறுவனத்திற்குச் செலுத்தக்கூடிய மீதமாக இருக்கிற தொகை எதையும் மீட்பதற்குமான உரிமையிருக்கும்.

3.3 இவ்வொப்பந்தத்தின் மற்றும்/அல்லது கடனின் கீழ் இருக்கிற தங்களது உரிமைகள், பலன்கள் அல்லது கடமைகள் அனைத்தையும் அல்லது எதையும், கடன் வாங்குபவர்(கள்) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நியமிக்கவோ அல்லது பெயர் மாற்றம் செய்யவோ கூடாது. FICCL நிறுவனத்திற்கு, எந்த நேரத்திலும், கடன் வாங்கியவர்(களிடம்) இருந்து எவ்வித ஒப்புதலையும் பெறாமல் அல்லது அவர்களுக்கு எவ்விதக் குறிப்பையும் கொடுக்காமல், FICCL நிறுவனம் முடிவு செய்யக்கூடிய எந்த முறையிலும், அதுபோன்ற விதிகள் மற்றும் நிபந்தனைகளிலும், இந்த ஒப்பந்தத்தின் கீழுள்ள தனது உரிமைகள், பலன்கள் மற்றும் கடமைகளை, எவருக்கும் முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதிகளையோ விற்கவோ, நியமிக்கவோ, பிணையச்சொத்தாக மாற்றவோ, பதிலாக இன்னொன்றை மாற்றவோ, அல்லது பெயர் மாற்றம் செய்யவோ உரிமை இருக்கும்.

3.4 கடன் வாங்கியவர்(கள்), FICCL நிறுவனத்திற்குக் கடன் வாங்கியவர்(கள்) சமர்ப்பித்துள்ள யதார்த்தம் அல்லது தகவல்களைச் சரிபார்க்க FICCL நிறுவனத்தின் தெரிவின் பேரில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மூன்றாம் தரப்பினர்களை நியமிக்கவும் மற்றும்/அல்லது FICCL நிறுவனத்திற்கு நிலுவையிலுள்ள தொகைகளை மீட்க/பெற அல்லது கடனின் கீழ் செலுத்தாமல் இருக்கிற தொகைகள் அனைத்தையும் FICCL நிறுவனத்தின் சார்பாக வசூலிக்கத் தேவையானபடி அனைத்துச் செயல்கள்/நடவடிக்கைகளையும் எடுப்பதற்காக, கடன் வாங்கியவர்களின் அலுவலகம் அல்லது வசிப்பிடத்திற்குச் சென்றுவர, நிலுவையிலுள்ள தொகையைப் பெற, மற்றும் அதுபோன்ற நோக்கங்களுக்காக மூன்றாம் தரப்பினர் ஏற்றது எனக் கருதக்கூடிய சட்டப்பூர்வமான அனைத்துச் செயல்பாடுகளையும் பொதுவாகவே செய்து முடிப்பதற்கான உரிமை மற்றும் அதிகாரத்தை அதுபோன்ற மூன்றாம் தரப்பினருக்குப் பெயர் மாற்றம் செய்ய அல்லது நியமிக்க, FICCL நிறுவனத்திற்கு முழு வல்லமையும், அதிகாரமும் இருக்கும் வெளிப்படையாகப் புரிந்துணர்ந்து கொண்டு ஏற்றுக் கொள்கிறார்கள்.

3.5 கடன் வாங்குபவர்(களுக்கு)க் கொடுத்துள்ள/அனுமதித்துள்ள/கொடுக்கவுள்ள/அனுமதிக்கவுள்ள கடனுக்கான முன்-நிபந்தனையாக, கடன் வாங்கியவர்களுக்குத் தொடர்புடைய தகவல்கள் மற்றும் விவரங்கள், கடன் வாங்கியவர்(கள்) பெற்றுள்ள கடன் வசதி எதுவும் குறித்தத் தகவல்கள் மற்றும் தரவுகள் மற்றும்/அல்லது கடன் வாங்கியவர்(களின்) கடமையைச் செய்வதில் கடன் வாங்கியவர்கள் கடமை தவறியது எதையும் செய்திருக்கிறார்கள் என்றால் அத்துடன் தொடர்புடைய தகவல்கள் மற்றும் தரவு, மற்றும்/அல்லது கடனைத் திருப்பிச் செலுத்திய வரலாறு ஆகிய அனைத்தையும், FICCL நிறுவனம் வியாபாரக் கூட்டு வைத்துள்ள அல்லது எதிர்காலத்தில் வைக்கக்கூடிய வியாபார அமைப்பு எதுவுடனும், வங்கிகள், நிதி நிறுவனங்கள், கிரெடிட் இன்ஃபர்மேஷன் பீரோ (இந்தியா) லிமிட்டெட் மற்றும்/அல்லது வேறு எந்த கிரெடிட் பீரோக்கள், முகமைகள், சட்ட அமைப்புகள் போன்றவற்றோடு, அவசியமாகிறபடி அல்லது FICCL நிறுவனம் பொருத்தமானது என நிதானிக்கிறபடி FICCL நிறுவனம், பகிர்ந்து கொள்ள, வெளிப்படுத்த, அல்லது கொடுக்கக் கடன் வாங்கியவர்(கள்) ஒப்புதலளித்து, சம்மதித்து, அங்கீகரிக்கிறார்கள். அவ்வாறு அங்கீகரித்துள்ள கிரெடிட் பீரோக்கள் மற்றும் வேறு எந்த முகமை FICCL நிறுவனம் வெளியிட்டுச் சொல்லியுள்ள தகவல்கள் மற்றும் தரவை, அவர்கள் பொருத்தமானது என நினைக்கிற முறையில், உபயோகித்து, அதன் மீது நடவடிக்கை எடுக்கலாம். மேற்கொண்டும், அது விஷயமாக, நடவடிக்கை எடுத்துள்ள தகவல்கள் மற்றும் தரவு, அல்லது இந்திய ரிசர்வ் வங்கி குறிப்பிட்டுள்ளபடி, வங்கிகள்/நிதி நிறுவனங்கள் மற்றும்/அல்லது வேறு எந்த கிரெடிட் உத்திரவாதமளிப்பவர்கள் அல்லது பதிவு செய்துள்ள பயனர்கள் ஆகியோர் அதில் தயாரித்துள்ள திட்டத்தைப் பரிசீலிப்பதற்கு, கடன் வாங்குபவர்(கள்) கிரெடிட் பீரோக்களை உறுதியும் செய்து, அனுமதிக்கவும் செய்கிறார்கள்.

3.6 கடன் வாங்குபவர்(கள்) இதன்மூலம், FICCL நிறுவனத்திற்கு, அதன் அலுவலர்களுக்கு மற்றும் முகவர்களுக்கு, கடன் வாங்குபவர்(கள்) மற்றும் கடன் வாங்குபவர்(களின்) கடன் கணக்குகள் மற்றும்/அல்லது FICCL நிறுவனத்தோடு கொண்டுள்ள கொடுக்கல் வாங்கல் உறாவு(கள்) மட்டுமல்லாமல், எந்த வசதிகள், எடுத்துள்ள எந்தப் பிணையச் சொத்து, மேற்கொண்டுள்ள பரிவர்த்தனைகள் மற்றும் FICCL நிறுவனத்தில் வைத்துள்ள மீதத்தொகை நிலவரங்கள் ஆகியவை தொடர்புடைய தகவல்களை பின்வருபவர்களுக்கு வெளிப்படுத்த ஒப்புதலளிக்கிறார்கள்:

(i) FICCL நிறுவனத்தின் தொழில்முறையிலான ஆலோசகர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள்;

(ii) எந்த ஒப்பந்தத்தின் கீழும், நிறுவனத்தின் உரிமை அல்லது கடமைமை எதுவும் தொடர்புடையதாக, உள்ளபடி நியமனம் பெற்றுள்ள அல்லது பெற வாய்ப்புள்ள வாரிசு, பதில் நியமனம் பெறுபவர், பெயர் மாற்றம் பெறுபவர், பங்கேற்பாளர் அல்லது துணைப் பங்கேற்பாளர்;

(iii) நிறுவனத்திற்கு அல்லது நிறுவனம் சேவைகளை வழங்குவதோடு தொடர்புடைய நோக்கங்களுக்காக, தரவரிசை முகமை, காப்பீட்டாளர் அல்லது நேரடி அல்லது மறைமுக கடன் பாதுகாப்பு அல்லது நிதி ஆதரவு வழங்கும் நிறுவனம்.

4. மத்தியஸ்தம்

4.1 இந்த ஒப்பந்தத்திலிருந்து அல்லது இது தொடர்பாக எழுகிற தகராறுகள், வேறுபாடுகள் மற்றும்/அல்லது கோரிக்கைகள் அனைத்தையும், 1996 ஆம் ஆண்டின் மத்தியஸ்தம் மற்றும் ஒப்புரவுச் சட்டத்தின் ஷரத்துக்கு அல்லது அதில் செய்கிற சட்டப்பூர்வமான திருத்தங்களுக்கு இணங்கவே மத்தியஸ்தம் செய்து தீர்க்க வேண்டும், இதையே FICCL நிறுவனம் நியமிக்கிற/பணியமர்த்துகிற தனிப்பட்ட மத்தியஸ்தர் ஒருவர் மத்தியஸ்தம் என்று குறிப்பிடுவார். மத்தியஸ்தர் ஒருவராகச் செயல்படுவதற்கு அவ்வாறு நியமனம் பெற்ற நபர்களின் மரணம், மறுப்பு, அலட்சியம், இயலாமை, அல்லது திறனற்றுப் போகுதல் ஆகிய நிகழ்வில், FICCL நிறுவனம் மத்தியஸ்தராகச் செயல்பட இன்னொருவரை நியமிக்கலாம். மத்தியஸ்தரின் தீர்ப்பே, இடைக்காலத் தீர்ப்பு/கள் உட்பட, இறுதியானதாகவும், உரிய அனைத்துத் தரப்பினர்களையும் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும். மத்தியஸ்த நடைமுறைகளை நடத்துவதில் மத்தியஸ்தர் பின்பற்ற வேண்டிய நடைமுறையை அவர் அவ்வப்போது வகுத்துக் கொள்ளலாம், அதோடு ஏற்றது என அவர் கருதுகிற, அதுபோன்ற முறையில் மத்தியஸ்த நடைமுறைகளை நடத்துவார். மத்தியஸ்த நடைமுறைகளை, கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள இடத்திலேயே நடத்துவார்கள். இங்கே இருக்கிற மத்தியஸ்த வகுப்பிற்கு உட்பட்டு, கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள இடத்தில் இருக்கிற சட்ட அதிகாரமுள்ள நீதிமன்றங்களுக்கு, இந்த ஒப்பந்தத்திலிருந்து அல்லது இது தொடர்பாக எழுகிற எந்த விஷயத்தின் மீதும், அல்லது சட்ட நடைமுறைகளின் மீதும் தனிப்பட்ட சட்ட எல்லையைக் கொண்டிருக்கும். ஆயினும், இது, வேறு எந்த நீதிமன்றத்திலோ அல்லது சட்ட எல்லையில் இருக்கிற நடுவர் மன்றத்திலோ மனு தக்கல் செய்ய/சட்ட நடவடிக்கைகளை எடுக்க, கடன் கொடுத்தவருக்கு இருக்கும் உரிமையைக் கட்டுப்படுத்தாது.

5. இதர விஷயங்கள்

5.1 இந்த ஒப்பந்தத்தின் எந்த விதி அல்லது ஷரத்தையும், சட்ட எல்லைக்குள் உள்ள நீதிமன்றம் ஒன்று செல்லாதது எனத் தீர்ப்பளிக்கிற பட்சத்தில், இந்த ஒப்பந்தத்தின் மீதியுள்ள விதிகள் மற்றும் ஷரத்துக்கள் பாதிப்படையாமலும், முழுமையாக நடப்பிலும், அமலிலும் இருக்கும்.

5.2 கடன் வாங்கியவர்(கள்), விண்ணப்பப் படிவத்திலும், அவ்விண்ணப்பத்தோடு சமர்ப்பித்துள்ள ஆவணங்களிலும் கொடுத்துள்ள/பூர்த்தி செய்துள்ள அனைத்து விவரக்குறிப்புகள் மற்றும் விவரங்கள் அனைத்தும் உண்மையானவை, சரியானவை, முழுமையானவை மற்றும் அனைத்து விதங்களிலும் நாளது தேதி வரையிலானவை என்றும், கடனை வழங்குவது குறித்த முடிவில் பாதிப்பொன்றை ஏற்படுத்தும், எவ்விதப் பொருள் சார்ந்த விவரத்தையும் மறைக்கவில்லை என்றும், பிரகடனம் செய்கிறார்கள்.

5.3 இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுகிற கடன் வாங்கியவர்(களின்) அலுவலர்களும், இதைத் தொடர்ந்து நிறைவேற்றவுள்ள ஆவணங்களும், முறையாகவும் முழுமையாகவும் அலுவலகத்திலேயே இருக்கின்றன அதோடு அவற்றை நிறைவேற்ற அவர்களுக்கு

5.4 கடன் வாங்குபவர்(களுக்கு) முழு அதிகாரமும், திறனும், இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றி, கொடுத்து, செய்துமுடிப்பதற்கான அதிகார பலமும் இருக்கின்றது அதோடு அவர்கள் இந்த ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், கொடுப்பதற்கும், செய்து முடிப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் (கூட்டாண்மை நிறுவனம் சார்ந்த, சட்டப்பூர்வமான அல்லது மற்றபடியான) எடுத்திருக்கிறார்கள்.

5.5 இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் வாங்கியவர்(கள்) செய்கிற எவ்வித விதிமீறல் அல்லது கடமை தவறுவதைச் செய்வதன் பேரில் FICCL நிறுவனத்திற்கு சேர்கிற எந்த உரிமை, அதிகாரம் அல்லது நிவாரணத்தைப் பயன்படுத்துவதற்கான தாமதம் அல்லது செய்யாமல் விடுவது எதுவும், அதுபோன்ற FICCL நிறுவனத்தின் உரிமை, அதிகாரம் அல்லது நிவாரணத்தைப் பாதிக்காது அல்லது அதை அது போன்ற விதிமீறல் அல்லது கடமை தவறியதைத் தள்ளுபடி செய்த ஒன்றாக அல்லது அது குறித்த தயக்கத்துடன் ஏற்றுக் கொள்ளும் ஒன்றாக எடுத்துக் கொள்ளக்கூடாது அல்லது ஒருமுறை விதிமீறியதற்கு அல்லது கடமை தவறியதற்குக் கொடுத்த தள்ளுபடி ஒன்றை, விதிமீறல் அல்லது கடமை தவறிய எதற்குமான தள்ளிபடியாக நிதானிக்கக் கூடாது. இவ்வொப்பந்தத்தில் நிறுவனத்திற்குக் கொடுத்துள்ள உரிமைகள் மற்றும் நிவாரணங்கள், ஒட்டுமொத்தமானவையாகும் அதோடு அவை சட்டம் வழங்கியுள்ள உரிமைகள் அல்லது நிவாரனங்கள் எதையும் தவிர்த்தவையல்ல.

5.6 வங்கியில் காசாக்காத காசோலைகளை அழித்தல்: கடன் சம்பந்தமாக FICCL நிறுவனத்தின் பெயரில் வழங்கியுள்ளபடியானதும், தற்போது FICCL நிறுவனத்தின் பாதுகாப்பில் இருக்கிறவையுமான, கடன் வாங்கியவர்(களின்) வங்கியில் காசாக்காத/உபயோகிக்காத காசோலைகள் எதையும், முதிர்வடைந்த வகையிலோ அல்லது கடனை முன்னதாகவே செலுத்தி விடுவதன் வகையிலோ கடனை முடித்துக் கொண்ட பிறகு மற்றும்/அல்லது மேற்கொண்டு எவ்வித அறிவிப்புமின்றி, உடனடியாக இரத்து செய்து விடுவார்கள் மற்றும்/அல்லது அழித்து விடுவார்கள்

5.7 இந்த ஒப்பந்தம் தொடர்பாக கடன் வாங்கியவர்களின் மீது FICCL நிறுவனம் பிறப்பிக்க வேண்டியுள்ள அறிவிப்பு/கடிதம் எதையும், கடன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள முகவரிகளில் எழுத்துப் பூர்வமாகவே அனுப்புவார்கள். கடன் வாங்கியவர்கள் FICCL நிறுவனத்திற்கு அனுப்பவுள்ள எழுத்துப்பூர்வ அறிவிப்பு எதையும், டன் சுருக்கப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள கிளை முகவரிக்கே, பதிவு/முன்பணம் செலுத்திய அஞ்சல் வாயிலாகவே அனுப்ப வேண்டும். கடன் வாங்கியவர்(கள்), தங்களது முகவரியில் ஏற்பட்டுள்ள மாற்றம் எதையும், மாற்றம் ஏற்பட்ட ஒரு வாரத்திற்குள் எழுத்துப்பூர்வமாக FICCL நிறுவனத்திற்கு அறிவித்துவிட வேண்டும்.

---

கடன் வாங்கியவர்(கள்) ☒ கூட்டாகச் சேர்ந்து கடன் வாங்கியவர் ☒ FICCL-காக அங்கீகாரம் பெற்ற கையொப்பதாரர்

5.8 இவ்வொப்பந்தத்தோடு பின்னிணைப்பாக சேர்த்துள்ள கடன் சுருக்கப் பட்டியல், அதிலுள்ள ஷரத்துக்களை இங்கே அமைத்துக் கொடுத்ததைப் போலவே, இந்த ஒப்பந்தத்தின் உள்ளானதோர் பகுதியாக அமைகிறது.

5.9 ஒப்பந்த விதிகளில் உள்ள அனைத்து விவரங்களையும் கடன் வாங்குபவர்(களின்) முன்னிலையிலேயே பூர்த்தி செய்திருக்கிறோம் என்பதையும், அவர்கள் கடனின் அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் படித்துப் பார்த்து ஒப்புக் கொண்டார்கள் எனவு கடன் வாங்குபவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். மேற்சொன்ன ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளையும், மற்ற ஆவணங்களையும் கடன் வாங்கியவர்(களுக்கு), கடன் வாங்கியவர்(கள்) புரிந்து கொண்ட மொழியில் விளக்கிச் சொல்லி விட்டோம் என்பதைக் கடன் வாங்கியவர்(கள்) ஒப்புக் கொள்கிறார்கள் அதோடு கடன் வாங்கியவர்(கள்) விதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஒட்டுமொத்த அர்த்தத்தையும் புரிந்து கொண்டுவிட்டார் அதோடு இந்த ஒப்பந்தத்தில் இருக்கிறா விஷயங்களைச் சரிபார்த்துப் புரிந்து கொண்ட பிறகு தனது கையொப்பத்தை இட்டிருக்கிறார்.

5.10 மேலோங்கிய தன்மை: இந்த ஒப்பந்தமும், இத்தோடு இணைத்துள்ள அல்லது இங்கே குறிப்பிட்டுள்ள வேறு எந்த ஆவணங்களும், இங்கே குறிப்பிட்டுள்ள அல்லது இங்கே ஏற்படுகிற அனைத்து விதிகளையும், நிபந்தனைகளையும் ஒருங்கிணைக்கின்றன அதோடு இங்குள்ள பொருள் விவரம் சம்பந்தமானதில், இந்த ஒப்பந்தத்திற்கு முன்னதாக வழங்கிய அனுமதிக் கடிதத்தின் ஷரத்துக்கள் தவிர, இவை இந்த ஒப்பந்த விதிகளுக்குக் கூடுதலானவையாகவும், சேர்ந்து இருப்பவையாகவும் இருக்கின்றன அதோடு இவை ஒரே மாதிரியானவையல்ல என்றும், அவற்றுக்கு முரணாக இருப்பதில்லை, அனைத்து விதமான வாய்மூலப் பேச்சுவார்த்தைகளுக்கும், முன்னர் செய்த எழுத்துக்களுக்கும் மேலோங்கியதாக அமைகின்றன. இந்த ஒப்பந்தம் மற்றும் இத்தோடு இணைத்துள்ள அல்லது இங்கு குறிப்பிடுகிற எந்த ஒப்பந்தம் மற்றும் அனுமதிக் கடிதம் அல்லது ஆவணங்களின் விதிகள், நிபந்தனைகள் மற்றும் ஷரத்துக்களுக்கு இடையே முரண்பாடு எதுவும் எழுகிற நிகழ்வில், அப்போது, அதுபோன்ற நிகழ்வில், இந்த ஒப்பந்தத்தின் விதிகள், நிபந்தனைகள் மற்றும் ஷரத்துக்களே மேலோங்கியதாக இருக்கும்

5.11 கடன் வாங்கியவர்(கள்) இந்த ஒப்பந்தமே முடிவானதாக இருக்கும் என்பதாகவும், இந்த ஒப்பந்தத்தில் நிறுவனத்தின் அதிகாரம்பெற்ற அலுவலர் கையொப்பமிடும் போது, அத்தேதியிலும், இடத்திலும் சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்துவதாக ஆகும் என்பதாகவும் ஒப்புக் கொள்கிறார்(கள்).

இங்குள்ளவற்றுக்குச் சாட்சியாக, இங்குள்ள அனைத்துத் தரப்பினர்களும், முதலில் இங்கே மேற்படி எழுதியுள்ள தேதி, மாதம் மற்றும் வருடத்தில் இத்தகைய தாக்கீதுகளை நிறைவேற்றியிருக்கிறார்கள்/நிறைவேற்றச் செய்திருக்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| கடன் வாங்குபவர்(களுக்காக) | | |
| கடன் வாங்கியவரின் பெயர்:<br>.....................................................................<br>அதிகாரப்பூர்வ கையொப்பமிடுபவரின் பெயர் (உரிமையாளர், கூட்டு & நிறுவனங்களுக்கு)<br>...................................................................... | | ☒<br>.........................................<br>(கையொப்பம்) |
| கூட்டாகக் கடன் வாங்கியவரின் பெயர்:<br>.....................................................................<br>அதிகாரப்பூர்வ கையொப்பமிடுபவரின் பெயர் (உரிமையாளர், கூட்டு & நிறுவனங்களுக்கு)<br>...................................................................... | | ☒<br>.........................................<br>(கையொப்பம்) |
| ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்காக அதிகாரப்பூர்வ கையொப்பமிடுபவரின் பெயர்:<br>...................................................................... | | ☒<br>.........................................<br>(கையொப்பம்) |

# கடன் ஒப்பந்தத்திற்
# கான
# கடன் சுருக்கப் பட்டியல்

இந்தக் கடன் சுருக்கப் பட்டியல், ________________________ தேதியிட்டதும், இங்குள்ள கடன் வாங்கியவர்(களுக்கும்), ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிட். நிறுவனத்திற்கும் இடையே நிறைவேற்றிய (கடன் ஒப்பந்தம்) கடன் ஒப்பந்தத்தின் ஒரு உள்ளான பகுதியாக அமைகிறது அதோடு இதனைக் கடன் ஒப்பந்தத்தோடு சேர்த்தே படிக்க வேண்டும்.

## DESCRIPTION OF THE LOAN FACILITY

| வ.எண். | விவரக்குறிப்புகள் | | விவரங்கள் |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பப் பார்வை எண்/ கடன் கணக்கு எண் | : | |
| 2 | FICCL நிறுவனக் கிளை அலுவலக முகவரி | : | |
| 3 | கடன் வாங்கியவர்(கள்) & கூட்டாகச் சேர்ந்து கடன் வாங்கியவர்(களின்) பெயர் & முகவரிகள் | : | பெயர் : ________________ முகவரி : ________________ |
| | | : | பெயர் : ________________ முகவரி : ________________ |
| 4 | கடன் தொகை | : | INR ________________/- (ரூபாய் ________________ மட்டும்) |
| 5 | வட்டி வீதம் | : | ____________ % ஆண்டிற்கு, குறைந்துவரும் மீதத்தொகை அடிப்படையில் (நிலையான விகிதம்) |
| 6 | கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் | : | ___________ மாதங்கள் |
| 7 | கூடுதல் வட்டி (பணம் செலுத்தக் கடமை தவறியதற்குப் பொருந்தும்) | : | நிலுவையிலுள்ள அசல் கடன் தொகைகளில் மாதத்திற்கு 0.75% (பூஜ்ஜியம் புள்ளி ஏழு ஐந்து சதவீதம்) அளவிற்கு மிகாததோர் தொகை |
| 8 | ஆவணக் கட்டணம்/கட்டணங்கள் | : | INR ____________/- தொகைக்கு மிகாததோர் தொகை, இதில் முன் EMI வட்டு/ முத்திரைக் கட்டணம் அடங்கும். |
| 9 | வரிகள் மற்றும் வரிவிதிப்புகள் | : | மேலே சுட்டிக்காட்டியுள்ள அல்லது இக்கடன் ஒப்பந்தத்தில் வேறெங்கேனும் இருக்கிற கட்டணங்கள், சேவை வரி மற்றும் அதன் மீதான திரிவை உட்பட, எவ்வித வரம்புமின்றி, அதன் மீது பொருந்தக்கூடிய அனைத்து வரிகள் மற்றும் சட்டப்பூர்வமான வரி விதிப்புகள் நீங்கலானவையாகும். |

## பணம் செலுத்தும் திட்டம்

| செலுத்தத்தக்க சம மாதத் தவணைகளின் (EMI) எண்ணிக்கை | முதல் EMI ஆரம்பிக்கும் நாள் | கடைசி EMI தவணைத் தேதி |
|---|---|---|
| | | |
| தவணை எண்ணிக்கை | ஒவ்வொரு EMI தவணையின் தவணைத் தேதி | EMI தொகை |
| முதல் ______________ வரை தவணை | | INR ________________/- |
| __________ இல் இருந்து ________ வரை தவணை | | INR ________________/- |
| மத்தியஸ்தம் & நீதிமன்ற ஆட்சி எல்லை | | |

| எல்லையின் இடம் | |
|---|---|
| கடன் வாங்கியவரின் பெயர்: ..........................................<br>அதிகாரப்பூர்வ கையொப்பமிடுபவரின் பெயர் (உரிமையாளர், கூட்டு நிறுவனங்களுக்கு)<br>.......................................... | ..........................................<br>(கையொப்பம்) |
| கூட்டாகக் கடன் வாங்கியவரின் பெயர்: ..........................................<br>அதிகாரப்பூர்வ கையொப்பமிடுபவரின் பெயர் (உரிமையாளர், கூட்டு நிறுவனங்களுக்கு)<br>.......................................... | ..........................................<br>(கையொப்பம்) |
| ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்காக கையொப்பமிடுபவரது பெயர்:<br>.......................................... | ..........................................<br>(கையொப்பம்) |

கட்டணங்கள் தாள்

| | | | |
|---|---|---|---|
| 1 | காசோலை/ரொக்கம் வசூலித்தல் (ஒரு வசூலுக்கு) | : | INR 300/- தொகைக்கு மிகாத ஒரு தொகை |
| 2 | ஸ்வாப் கட்டணங்கள்-பின் தேதியிட்ட காசோலைகளுக்குப் பதிலாக ECS மாற்றுவதற்கு (ஒரு நிகழ்விற்கு) | : | INR 500/- தொகைக்கு மிகாத ஒரு தொகை |
| 3 | ஸ்வாப் கட்டணங்கள்-ECS-க்கு பதிலாக வங்கியை மாற்றுவதற்கு (ஒரு நிகழ்விற்கு) | : | INR 500/- தொகைக்கு மிகாத ஒரு தொகை |
| 4 | கடன் இரத்து செய்தல் கட்டணங்கள் (முதல் EMI-க்கு முன்பே கடனை இரத்து செய்தல்) | : | INR 1000/- தொகைக்கு மிகாத ஒரு தொகை |
| 5 | காசோலை/ECS பணமில்லாமல் திரும்புவதற்கான கட்டணங்கள் (ஒருமுறை கொடுப்பதற்கு ஒரு காசோலை/ECS பணமில்லாமல் திரும்புவதற்கு) | : | INR 30/- தொகைக்கு மிகாத ஒரு தொகை |
| 6 | முன்கூட்டியே பணம் செலுத்துவதற்கான கட்டணங்கள் | : | (a) கடனைப் பாதியளவு முன்னரே செலுத்திக் கொள்வதற்கு அனுமதிப்பதில்லை.<br>(b) நிலுவையிலுள்ள வட்டித் தொகைகளோடு சேர்த்து ஒட்டுமொத்தக் கடனையும் திருப்பிச் செலுத்தும் நிலையில்:<br>• ஒப்பந்தத் தேதியிலிருந்து 0 முதல் 17 மாதங்கள் : பணத்தை முன்னமே செலுத்தும் தேதியில் நிலுவையில் இருக்கிற அசல் கடன் தொகையில் 7%;<br>• ஒப்பந்தத் தேதியிலிருந்து 18 முதல் 23 மாதங்கள் : பணத்தை முன்னமே செலுத்தும் தேதியில் நிலுவையில் இருக்கிற அசல் கடன் தொகையில் 5%;<br>• ஒப்பந்தத் தேதியிலிருந்து 24 முதல் 35 மாதங்கள் : பணத்தை முன்னமே செலுத்தும் தேதியில் நிலுவையில் இருக்கிற அசல் கடன் தொகையில் 3%;<br>அல்லது அவ்வப்போது நிறுவனம் குறிப்பிடக்கூடிய அதுபோன்ற மற்ற தொகை.<br>(c) ஒப்பந்தத் தேதியிலிருந்து 36 மாதங்களுக்குப் பிறகு பணத்தை கடன் முடியும் முன்னே செலுத்தும் நிலையில் எவ்வித முன்னரே பணம் செலுத்துவதற்கான கட்டணங்களும் பொருந்தாது |
| 7 | பணம் திருப்பிக் கொடுப்பதற்கான நடவடிக்கைக் கட்டணம் | : | INR 250/- தொகைக்கு மிகாத ஒரு தொகை |

வாடிக்கையாளரின் பெயர்:
.................................................................... ........................................ ☒
(கையொப்பம்)

கடன் வாங்கியவரும், கூட்டாகச் சேர்ந்து கடன் வாங்கியவரும் கையொப்பமிடுவதற்கு

## டிமாண்டு பிராமிசரி நோட்டு

தேதி: ____________________

இடம்: ____________________

கோருவதன் பேரில் நான்/நாங்கள் ..........................................................................................................................................

...................................................... ஆகியோர் கூட்டாகவும், பலவாறாகவும், நிபந்தனையின்றியும், மேக் டவர்ஸ், 3ஆம் தளம், பழைய எண். 307, புதிய எண். 165, பூந்தமல்லி நெடுஞ்சாலை, மதுரவாயல், சென்னை-600095,

தமிழ்நாடு என்ற முகவரியில் தனது பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள, ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிட்டெட் (FICCL) ☒

நிறுவனத்திற்குப் பணம் செலுத்த, அல்லது ரூ. ............................../- (ரூபாய் ........................................................................ மட்டும்)

அதிலுள்ள வட்டியோடு சேர்த்து, அதன் வட்டி விகிதம் வருடத்திற்கு .............. %, பெற்றுக் கொண்ட மதிப்பிற்காந மாதாந்திர மீதத்தொகையில் கணக்கிடுவது. பணம் செலுத்தக் கோருவதும், பிராமிசரி நோட்டிற்கு மதிப்பளிக்காமல் போவதையும், நிபந்தனையின்றி, திரும்பப் பெற முடியாத வண்ணம் தள்ளுபடி செய்கிறோம்.

இங்கே ஒன்றுக்கும் மேற்பட்ட கையொப்பமிடுபவர்கள் இருக்கிற பட்சத்தில், கையொப்பமிடும் ஒவ்வொருவரது பொறுப்பும், கூட்டாகவும், பலவாறாகவும் இருக்கும்.

| | |
|---|---|
| கூட்டாகக் கடன் வாங்குபவரின் பெயர் ______________________ | INR 1/- ரெவென்யூ ஸ்டாம்பை இங்கே ஒட்டுங்கள் கடன் வாங்குபவர் |
| கூட்டாகக் கடன் வாங்குபவரின் பெயர் ______________________ | INR 1/- ரெவென்யூ ஸ்டாம்பை இங்கே ஒட்டுங்கள் உடன்-கடன் பெறுபவர் |
| கூட்டாகக் கடன் வாங்குபவரின் பெயர் ______________________ | INR 1/- ரெவென்யூ ஸ்டாம்பை இங்கே ஒட்டுங்கள் உடன்-கடன் பெறுபவர் |
| கூட்டாகக் கடன் வாங்குபவரின் பெயர் ______________________ | INR 1/- ரெவென்யூ ஸ்டாம்பை இங்கே ஒட்டுங்கள் உடன்-கடன் பெறுபவர் |

(குறிப்பு-(x) கையொப்பத்தை ஸ்டாம்பின் குறுக்காகப் போட வேண்டும்)

# கடன் தொகையைக் கொடுப்பதற்கான அறிவுறுத்தல்

தேதி:

தேதி வரை
ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட்

.........................................
.........................................
.........................................
.........................................

பொருள்: கடன் கொடுத்தனுப்புவதற்கான அங்கீகாரம்

அய்யா,

……………………………………………….. அவர்களுக்குக் கடன் வசதியைக் கொடுப்பதற்கான விண்ணப்பத்தைப் பாருங்கள் இங்கே தோன்றுகிறா பெயர் மற்றும் முறையில் கடன் கொடுத்தனுப்பும் காசோலையை அருள் கூர்ந்து தயார் செய்யவும்:

| பணம் கொடுப்பவரின் பெயர் | தொகை (INR) |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

☒

மேற்படி பணம் பெறுபவருக்குச் சாதகமாக கடன் தொகையைக் கொடுத்தனுப்புவது, கடன் வசதி தொடர்பாகவுள்ள எனது/எங்களது கடமையைப் பாதிக்காது.
மேற்படி பணம் பெறுபவருக்குச் சாதகமாக கடனைக் கொடுத்தனுப்புவது, எனக்கு எங்களுக்குக் கொடுத்த மற்றும் பெற்ற கடனுக்கானதாக இருக்கும் என்றே நிதானிப்போம்.
நன்றி

கடன் வாங்கியவரின் பெயர்: ………………………………………………………………………… ……………………………………… (கையொப்பம்) ☒

அதிகாரப்பூர்வ கையொப்பமிடுபவரின் பெயர் (உரிமையாளர், கூட்டு நிறுவனங்களுக்கு)

…………………………………………………………………………………………………

கூட்டாகக் கடன் வாங்கியவரின் பெயர்: ……………………………………………………………… ……………………………………… (கையொப்பம்) ☒

அதிகாரப்பூர்வ கையொப்பமிடுபவரின் பெயர் (உரிமையாளர், கூட்டு நிறுவனங்களுக்கு)

…………………………………………………………………………………………………

உறுதிப்படுத்தல்

எனக்கு/எங்களுக்குக் கடனைக் கொடுத்தனுப்புவதன் பால், பின்வரும் விவரக்குறிப்புள்ள காசோலைகளை நான்/நாங்கள் பெற்றிருப்பதற்கு ஒப்புகை செய்கிறோம்

| காசோலை எண் | தொகை | தேதி | வங்கிப் பெயர் | பெயரில் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

☒

நன்றி

கடன் வாங்கியவரின் பெயர்: ………………………………………………………………………… ……………………………………… (கையொப்பம்) ☒

அதிகாரப்பூர்வ கையொப்பமிடுபவரின் பெயர் (உரிமையாளர், கூட்டு & நிறுவனங்களுக்கு)

…………………………………………………………………………………………………

கூட்டாகக் கடன் வாங்கியவரின் பெயர்: ……………………………………………………………… ……………………………………… (கையொப்பம்) ☒

அதிகாரப்பூர்வ கையொப்பமிடுபவரின் பெயர் (உரிமையாளர், கூட்டு & நிறுவனங்களுக்கு)

…………………………………………………………………………………………………

# ‘நேஷனல் எலெக்ட்ரானிக் ஃபண்டு டிரன்ஸ்ஃபெர்’ வசதி வாயிலாகக் கடன் கொடுத்தனுப்புவதற்கான விண்ணப்பப் படிவம்

தேதி: [ ]

தேதி வரை
ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட்
______________________
______________________
______________________

பொருள்: ‘நேஷனல் எலெக்ட்ரானிக் ஃபண்டு டிரன்ஸ்ஃபெர்’ திடம் வாயிலாக மின்னணு முறையில் நிதிப் பரிவர்த்தனை செய்து, கடனைக் கொடுத்தனுப்புதல்

பார்வை கடன் விண்ணப்பப் பார்வை எண் :[ ]
கடன் கணக்கு எண் :[ ]

அன்புள்ள அய்யா,

எனது/எங்களது கடன் விண்ணப்பம் சம்பந்தமாக, நான்/நாங்கள் இதன் மூலமாக நிபந்தனையற்ற முறையில், அனுமதித்துள்ள கடன் தொகையான ரூ. ______________/- (ரூபாய் ______________________மட்டும்) தொகையை, ஆவணமாக்கல் கட்டணங்கள் & நடவடிக்கைக் கட்டணங்கள் ஆகிவற்றைப் பின்வரும் விவரங்களுக்குத் தக்கபடிக் கழித்துக் கொண்ட பிறகு, நேரடியாகச் செலுத்தி விடுவதற்கு, ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கோ.லிட் (ஃபுல்லெர்ட்டான் இந்தியா) நிறுவனத்திற்கு அறிவுறுத்துகிறோம்:-

பயனாளியின் விவரங்கள்

| | | |
|---|---|---|
| பயனாளியின் வங்கிப் பெயர் | : | |
| பயனாளியின் வங்கிக் கணக்குப் பெயர் | : | |
| பயனாளியின் வங்கிக் கணக்கு# | : | |
| பயனாளியின் வங்கிக் கணக்கு வகை | : | ☐ சேமிப்பு ☐ நடப்பு ☐ ரொக்க வரவு |
| பயனாளியின் வங்கிப் பணம் செலுத்துமிடம் | : | |
| பயனாளியின் வங்கிக் கிளை IFSC குறியீடு | : | |
| MICR குறியீடு | : | |
| செலுத்த வேண்டிய தொகை | : | |

☒

நாங்கள் பின்வருமாறு பிரகடனம் செய்கிறோம்:

- மேலே கொடுத்துள்ள விவரங்கள், எனது/எங்களது அறிவிற்கெட்டிய வரையில், உண்மையானவையும், சரியானவையும், முழுமையானவையுமாக இருக்கின்றன என்றும். பணம் செலுத்துவதற்கான அறிவுறுத்தலில் கொடுத்துள்ள விவரங்களின் துல்லியத்தன்மைக்கு நான்/நாங்களே பொறுப்பு.
- FICCL நிறுவனம் நன்னம்பிக்கையிலும், மின்னணு நிதிப் பரிவர்த்தனைக்கான இணக்க அறிவுறுத்தல்களிலும், பணம் செலுத்துவதற்கான அறிவுறுத்தலை நிறைவேற்றியிருந்த பட்சத்தில், FICCL நிறுவனம் நிறைவேற்றுகிற பணம் செலுத்துவதற்கான அறிவுறுத்தல் எதற்கும், நான்/நாங்கள் கட்டுப்பட்டு நடப்போம்.
- மேற்சொன்ன பயனாளிக்குச் சாதகமாக கடனைக் கொடுத்தனுப்புவது, எனக்கு எங்களுக்குக் கொடுத்த மற்றும் பெற்ற கடனுக்கானதாக இருக்கும் என்றே நிதானிப்போம். மேற்படி பயனாளி பணம் பெறுபவருக்குச் சாதகமாக கடன் தொகையைக் கொடுத்தனுப்புவது, கடன் வசதி தொடர்பாகவுள்ள எனது/எங்களது கடமையைப் பாதிக்காது.
- முழுமையற்ற தகவல்களில் இருந்து, கடத்துவதில் அல்லது கொடுபோய்க் கொடுப்பதில் தாமதம் அல்லது மின்னணுச் செய்திகள் போய்ச்சேராமல் இருத்தல் அல்லது கடத்துவதில் அல்லது அவற்றைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் ஏற்படுகிற தவறு, விடுபடுதல் அல்லது பிழை அல்லது கட்டுப்பாட்டிற்கு அப்பால் ஏற்படுகிற நிகழ்வு எதாலும் எழுகிற அல்லது அவற்றால் விளைகிற எவ்விதச் சேதம் அல்லது இழப்பிற்கும் ஃபுல்லெர்ட்டான் இந்தியா நிறுவனம் பொறுப்பாகாது. மேலுள்ளவை இருந்த போதிலும், Fullerton India நிறுவனத்தின் தரப்பில் ஏற்பட்ட அலட்சியம் எதன் காரணமாகவும், பணம் கொடுக்கச் சொன்ன அறிவுறுத்தலைத் தொடர்ந்து நிதிப் பரிவர்த்தனையை நிறைவு செய்வதில் தாமதம் எதுவும் ஏற்படுகிற நிகழ்வில், தாமதமாகப் பணப்பட்டுவாடா செய்கிற நிலையில், தாமதமான காலத்திற்கு வங்கி வட்டி விகிதத்தில் வட்டியைக் கொடுக்கிற அளவிற்கு மட்டுமே Fullerton India நிறுவனத்திற்குப் பொறுப்பு இருக்கும்.
- நான்/நாங்கள் இந்த விண்ணப்பப் படிவத்தில் சரியல்லாத தகவல்களைக் கொடுத்ததன் காரணமாக, பணம் வரவாகாமல் இருப்பது எதற்கும் அல்லது செலுத்திய தொகையைத் தவறான பயனாளிக்கு வரவு வைப்பதற்கு Fullerton India நிறுவனம் பொறுப்பாகாது.
- கணக்கில் வரவு வைப்பதற்குப் பயனாளி வங்கி கட்டணங்களை விதித்து, அதையே செலுத்திய தொகையிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம்.

அனைத்து ‘நேஷனல் எலெக்ட்ராணிக் ஃபண்ட் டிரான்ஸ்ஃபர் (NEFT)’ அறிவுறுத்தல்கள் யாவும், திரும்பப் பெற முடியாதவை என்றும், NEFT வாயிலாகப் பணம் செலுத்துவது சம்பந்தமாக ‘ஸ்டாப் பேமெண்ட்’ அறிவுறுத்தலைக் கொடுப்பதற்கான வசதி எதுவும் இல்லை என்பதையும் நான் புரிந்து கொள்கிறேன்.

நன்றி.

தங்கள் உண்மையுள்ள

| கடன் வாங்கியவர் & கூட்டாகச் சேர்ந்து கடன் வாங்கியவர்களின் பெயர் | | கையொப்பம் |
|---|---|---|
| பெயர்: ............................................................ | | ........................................ ☒ (கையொப்பம்) |
| பெயர்: ............................................................ | | ........................................ ☒ (கையொப்பம்) |

# மிக முக்கியமான விதிகள் மற்றும் நிபந்தனைகள்

## கையொப்பமிடுமுன் தயவுசெய்து கவனமாகப் படித்துப் பாருங்கள்

## ஒப்புகைப் படிவம்

தேதி: [ ]

நான்/நாங்கள், விண்ணப்பப் பார்வை எண். ................................. மற்றும் கடன் ஒப்பந்தம் தேதி ..................... அன்று ஃபுல்லெர்ட்டான் இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிட்டெட் (FICCL) பெயரில் நான்/நாங்கள் நிறையற்றியதைக் குறிப்பிடுகிறோம். எனக்கு/எங்களுக்குப் பின்வரும் தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள் அதோடு அதற்கேற்ப மேற்சொல்லியுள்ள ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்திருக்கிறோம்:

| | | |
|---|---|---|
| கடன் தொகை | : | INR |
| குறைந்து வரும் மீதத்தொகையில் வட்டி விகிதம் (% ஆண்டிற்கு) | : | |
| அதற்கேற்ற நிலையான வட்டி விகிதம் (% ஆண்டிற்கு)* | : | |
| கடன் திருப்பிச் செலுத்தும் காலம், மாதங்களில் | : | |
| மாதாந்திரத் தவணைத் தொகை (EMI) | : | INR |
| மொத்தக் கட்டணம் (கடன் ஆவணக் கட்டணங்கள், முன் EMI எதுவுமிருந்தால் அவை உட்பட) | : | INR |
| காப்பீட்டுப் பிரீமியம் கட்டணங்கள் | : | INR |
| IHO கட்டணங்கள் | : | INR |

☒

*நான்/நாங்கள், மேலே குறிப்பிட்டுள்ள நிலையான வட்டி விகிதம், விளக்கிச் சொல்லும் நோக்கத்திற்கானதே என்றும், வட்டி விகிதத்தை, மாதாந்திர மீதத் தொகையோடு கூட்டுகிற அடிப்படையில் குறைந்து வருகிற மீதத்தொகையில் கடன் மீதி விதிப்பார்கள் என்பதையும் தெரிந்து வைத்திருக்கிறோம்.

நிலையான வட்டியைப் பின்வருவதன்படியே கணக்கிடுகிறார்கள்:

$$\text{வட்டி விகிதம் \%} = \frac{(\text{EMI x திருப்பிச் செலுத்தும் காலம் மாதங்களில்})-\text{அசல் x 100}}{\text{அசல் x திருப்பிச் செலுத்தும் காலம் ஆண்டுகளில்}}$$

நாங்கள் பின்வருவனவற்றை ஒப்புகை செய்கிறோம்:

- மேலுள்ளவை, மேற்சொல்லியுள்ள கடனின் மிகவும் முக்கியமான விதிகளாகும் அதோடு கடனின் அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகள் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடியே இருக்கும்.
- FICCL நிறுவனத்திற்கு, எவ்விதக் கட்டணங்களை விதிப்பது குறித்தும் மற்றும் அல்லது கட்டண விதிப்பில் ஏற்படுகிற மாற்றம் குறித்தோ அல்லது அதுபோன்ற கட்டண விதிப்பை அறிமுகம் செய்வது குறித்தோ எங்களுக்கு முன்னதாகவோ அல்லது விதித்ததைத் தொடர்ந்தோ தெரிவிப்பது கட்டாயமானதல்ல என்ற யதார்த்தத்தை நான்/நாங்கள் தெரிந்து வைத்திருக்கிறோம்.
- FICCL நிறுவனத்திற்கு, கடமை தவறும் நிகழ்வில், எவ்வித அறிவிப்பும் இன்றி, கடன் வசதியைச் சேர்க்கவோ, அழிக்கவோ, திரும்பக் கேட்கவோ அல்லது மேற்சொன்ன விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றியமைக்கவோ உரிமையிருக்கிறது அதோடு அதுவே என்னை/எங்களைக் கட்டுப்படுத்துவதாக இருக்கும்.
- தகவல் தொடர்பு கொள்வதற்கான முகவரியில் மாற்றம் எதுவும், எனது/எங்களது வேலை, தொழிலில் மாற்றம் எதுவும் இருக்கிற நிகழ்வில், அதையே நான்/நாங்கள் FICCL நிறுவனத்திற்கு, ஒரு மாதத்திற்கு முன்பே தெரிவித்து விடுவோம்.

கடன் வாங்கியவர்(களின்) பெயர்: .......................................... ☒

கையொப்பங்(கள்): ......................................................... ☒

- மேற்படி ஆவணம் காலியாக இருந்தால் தயவுசெய்து அதில் கையொப்பமிடாதீர்கள்.
- உங்களது கடன் மீது நடவடிக்கை எடுப்பதற்காக தயவுசெய்து எவருக்கும் ரொக்கப்பணம் கொடுக்காதீர்கள். உங்களிடம் கேட்கும் நிலையில்,
  தயவுசெய்து கொடுக்க மறுத்து விட்டு, உங்களுக்கு மிக அருகில் இருக்கிற FICCL நிறுவனக் கிளையைத் தொடர்பு கொள்ளுங்கள்.